DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 131/2025

Prosecution PW 1

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | தர்மலிங்கம் |
| Father's Name | : | ஆறுமுகம் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |
| Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 23.02.2026.

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் ஆத்தூர், குந்தன் நகரில் குடியிருந்து டின்கர் பட்டறை வைத்துள்ளேன். ரெங்கசாமியை எனக்கு தெரியும். வாட்ச்மேனாக வேலை செய்து வருகிறார். சுமார் 1 1/2 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் ரெங்கசாமி என்னிடம் வாட்ச்மேனாக பணிபுரிந்து வந்தார். அவர் டீ சாப்பிட்டுவிட்டு கிழமேல்

சாலையில் வலது பக்கத்திலிருந்து இடது பக்கமாக ரோட்டை கடந்து வந்தபோது, கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்த கார் வேகமாக வந்து ரெங்கசாமி மீது மோதியது. ரெங்கசாமிக்கு தலையில் அடிபட்டது. பின்னர், ஆம்புலன்ஸ் மூலம் அடிபட்ட ரெங்சாமியை கரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தேன். விபத்து நடந்த பதட்டத்தில் காரின் பதிவெண்ணை நான் பார்க்கவில்லை. காரின் ஓட்டுனரை பார்த்தேன், தற்போது ஞாபகமில்லை. பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். ஆஜர் எதிரிதான் விபத்தை ஏற்படுத்திய காரின் ஓட்டுனர் ஆவார். சம்பவம் குறித்து ரெங்கசாமியின் உறவினருக்கு தகவல் சொல்லிவிட்டு கரூர் நகர காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது. **புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

நான் 7ம் வகுப்பு வரை படித்துள்ளேன். புகாரை யார் எழுதினார்கள் என்றால் கரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் போலிசார் எழுதிய புகாரில்தான் நான் கையொப்பம் செய்து கொடுத்தேன். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்து நடந்த இடமானது கரூர் – ஈரோடு செல்லக்கூடிய மாநில நெடுஞ்சாலை என்றால் சரிதான். எனது சாலையின் தென்புறமும், டீக்கடை சாலையின் வடபுறமும் உள்ளது என்றால் சரிதான். அந்த பகுதியில் மேற்கு மார்க்கமாக செல்வதற்கு சாலையின் தென்புறத்தில் பஸ் நிறுத்தமும், கிழக்குபுற மார்க்கமாக செல்வதற்கு சாலையின் வடபுறமும் பஸ் நிறுத்தமும் உள்ளது என்றால் சரிதான். பஸ்சிற்கு செல்லக்கூடிய நபர்கள் சாலையில் தென்புறமுள்ள மரத்திற்கு கீழ் ஒரு சிறிய கல்லில் குந்த வைத்துக்கொண்டு பஸ்சிற்காக காத்திருப்பார்கள் என்றால் சரிதான். நான் சத்தம் கேட்டுதான் சென்று விபத்தில் காயம்பட்ட நபரை சென்று பார்த்தேன் என்றால் சரிதான். விபத்தை ஏற்படுத்திய கார் ஓட்டுனரை நான்

போலிசாரிடம் பிடித்து ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். அவருடைய பெயர் முகவரி எதுவும் எனக்கு தெரியாது. காரை ஓட்டிய நபரை அடையாளம் காட்டுவதற்கு எந்த ஒரு அடையாள அணிவகுப்பிற்கும் போலிசார் என்னை அழைக்கவில்லை என்றால் சரிதான். நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. விபத்தில் இறந்துபோன நபர் என்னிடம் வேலை செய்யும் நபர் என்பதற்காக பார்க்காத சம்பவத்தை நேரில் பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./-எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 131/2025

Prosecution PW 2

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | சதிஷ் |
| Father's Name | : | கணேசன் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |
| Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 23.02.2026.

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் திருச்சி மாவட்டம், வீரப்பூரில் குடியிருந்து தற்போது ஆத்தூர் ரோட்டில் டாடா மோட்டார்ஸ் நிறுவனத்தில் தங்கி வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். அவர் டின்கர் பட்டறை வைத்துள்ளார். 19.11.2024 ம் தேதி மாலை சுமார் 06.00 – 07.00 மணியளவில் அ.சா.1 ன் பட்டறையில்

வாட்ச்மேனாக வேலை பார்க்கும் நபர் பணிக்கு வந்தபோது, டீ சாப்பிட்டுவிட்டு வடக்கிலிருந்து தெற்காக கரூர் – ஈரோடு செல்லும் சாலையை கடந்து வந்தபோது, கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்த கார் வாட்ச்மேன் மீது மோதியது. சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன். வாட்ச்மேனுக்கு காதிலிருந்து ரத்தம் வந்தது. அடிபட்ட வாட்ச்மேனை ஆம்புலன்ஸ் மூலம் கரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை அழைத்து சென்றோம். அடிபட்டவரை ஆம்புலன்சில் ஏற்றி சென்றதால் காரின் பதிவெண்ணை பார்க்கவில்லை. விபத்தை ஏற்படுத்திய காரின் ஓட்டுனரை நான் பார்க்கவில்லை. போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

நான் சத்தம் கேட்டுதான் விபத்து நடந்ததை பார்த்தேன் என்றால் சரிதான். அவர் ரோட்டை பார்த்து நடந்து வந்திருந்தால் விபத்து நடந்திருக்காது என்றால் சரிதான். நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும், விபத்தில் இறந்துபோன நபர் எனது நண்பரான அ.சா.1 யிடம் வேலை பார்க்கும் என்பதால் போலிசார் சொல்லிக் கொடுத்ததற்கினங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./–எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 131/2025

Prosecution PW 3

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | சங்கர் |
| Father's Name | : | நாட்ராயன் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |
| Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 23.02.2026.

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் புன்னம்சத்திரத்தில் குடியிருந்து கொத்தனார் வேலை பார்த்து வருகிறேன். அ.சா.2 ஐ எனக்கு தெரியாது. 19 ம் தேதி 2 1/2 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் மாலை சுமார் 06.15 மணிக்கு மேல் விபத்து நடந்த சம்பவ இடத்திற்கு அருகிலுள்ள டீக்கடையில் டீ சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி ஒரு கார் வந்தது. தெற்கிலிருந்து வடக்காக கரூர் – ஈரோடு

ரோட்டை கடந்து ஒரு நபர் வந்தார். கார் அவர்மீது மோதிவிட்டு சென்றது. கூட்டம் கூடியது. அந்த நபருக்கு தலையில் அடிபட்டது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சி குவிமுச பிரிவு 161க்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

**குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)**

போலீஸ் விசாரணையில் கடந்த 19.11.2024ம் தேதி மாலை 6.30 மணியளவில் டாடா மோட்டார்ஸ் கம்பெனி அருகே அ.சா.2 உடன் பேசிக்கொண்டிருந்தபோது, TN 33 BU 3226 என்ற கியா காரை ஆஜர் எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து ரெங்கசாமியின் மீது மோதியதாகவும், சம்பவத்தை நேரில் பார்த்தேன் என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

நான் சத்தம் கேட்டுதான் விபத்து நடந்ததை பார்த்தேன் என்றால் சரிதான். வண்டியின் பதிவெண்ணை நான் பார்க்கவில்லை. விபத்தை ஏற்படுத்திய நபரை நான் போலிசாரிடம் பிடித்து ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுனர் யார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அரசு தரப்பு குறுக்கு விசாரணையில் கூறியதுபோல் எந்த சம்பவமும் அதை நான் நேரில் பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல. அரசு தரப்பில் சம்பவம் குறித்து கூறியது போல் நான் சரிய என்று மட்டும் கூறினேன்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./−எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 131/2025

Prosecution PW 4

Deposition of Witness for Defence

Court

Name : முருகன்

Father's Name : பழனிச்சாமி

Village :

Taluk :

District :

Age :

Calling :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 23.02.2026.

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் ஆத்தூர் காந்தி நகரில் குடியிருந்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள முதுலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. என்னுடன் தமிழரசன் என்பவர் கையொப்பம் செய்தார். கடந்த 20.11.2024 ம் தேதி காலை சுமார் 06.00 மணியளவில் முதல் நாள் நடந்த விபத்து சம்மந்தமாக கரூர் நகர போலிசார் சம்பவ இடம் வந்து

விசாரணை செய்து சம்பவ இடத்தைப் பார்வையிட்டு வரைபடம் வரைந்தனர். அதற்காக சம்பவ இடத்தில் நானும், தமிழரசனும் பார்வை மகசரில் கையொப்பம் செய்து கொடுத்தோம். **அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். சம்பவம் நடந்த இடத்திற்கு அருகில் எனது குடியிருப்பு இல்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகிலுள்ள பட்ஸ நிறுத்தத்தில் இரண்டு பக்கமும் பஸ் ஏறுவதற்காக காத்திருப்பார்கள் என்றால் சரிதான். டீக்கடையில் டீக் குடிப்பதற்காக பொது மக்களும், கடையின் உரிமையாளர் மற்றும் வேலை பார்ப்பவர்கள் இருப்பார்கள் என்றால் சரிதான். இறந்துபோனவர் எனக்கு என்ன உறவு முறை என்றால் அவர் எனக்கு தாத்தா உறவுமுறை ஆகும். நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன விவரம் எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. இறந்தவர் எனது உறவினர் என்பதால் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு தற்சமயம் போலிசார் சொல்லிக் கொடுத்ததுபோல் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./–எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**